www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 015

29 ஏப்பிரல் 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# பாரிசில் நாடுகடந்த அரசின் எல்லை கடந்த "ரவுடியிசம்"




பரிஸ் மற்றும் புறநகர்பகுதியில் சட்டத்துக்கு மீறிய வகையிலும், மக்களுக்கும், தமிழர் நிறுவனங்களுக்கும் இம்சை தரும் வகையிலும் தமது பிரச்சார சுவரொட்டிகளை கேபியின் ரவுடிக் கும்பல் ஒட்டியுள்ளது. இச்சுவரொட்டிகள் நடுநிசியில் திரியும் நாடுகடந்த அரசின் ரவுடிக்கும்பலால் ஒட்டப்படுவதாகவும், இது குறித்து பொதுமகன் ஒருவர் முன்னாள் தான்தோன்றித்தன ரவுடி மனோவிடம் தனது அதிருப்தியை வெளியிட்டபோது, 'பிரச்சனையில்லை எல்லாரும் நான் முன்னம் வேலை செய்யேக்க பேசாம இருந்தது போல இப்பவும் பேசாம இருப்பினம்' என ரவுடிப்பாணியில் தெரிவித்துள்ளார்.

இதே வேளை சுவரொட்டிகள் ஒட்டிய ஒருவர் கருத்து தெரிவித்த போது, 'மனோ அண்ண சொன்னவர் எங்கயெல்லாம் இடமிருக்கோ அங்கயெல்லாம் ஒட்டுங்கோ, மற்ற ஒருத்தரும் ஒண்டும் ஒட்டக்கூடாதென்றார்'. முன்னர் இந்த மனோ பிரெஞ்சுக்கிளை பொறுப்பாளராக கேபியின் கீழ் இருந்தபோது ரவுடியிச அரசியலை நடத்தினார் என்றும், தனக்கு பிடிக்காதவர்களை ஒதுக்கினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இயக்கத்தின் நிதியில் வாழ்ந்த இவருக்கு, கேபி தனது கைக்குள் வைத்திருப்பதற்காக இவரது நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமலும், தலைமைக்குத் தெரிவிக்காமலும் இருந்தாராம். முன்னர் இவரின் வீட்டில் இருந்த, மீன்தொட்டி விடயம் (அதாவது இயக்கப்பணத்தில் மீன் தொட்டி வாங்கியதை) தமிழ் ஊடகவியலாளர் கண்டுபிடித்து அப்பலப்படுத்திய போது இவர் அவரைத் தூற்றியது மற்றொரு கதை. மனோ இயக்கத்துக்கு பணி புரிந்த காலத்தில் சேர்க்கப்பட்ட பணத்தில் சில பகுதிகளைத்தான் நாட்டுக்கு அனுப்பியிருந்தார். இவர் பத்து வருடங்களுக்கு முன்னர் கட்டார் நாட்டில் சுரேஸ் என்பவரை வைத்து தனிப்பட்ட கம்பனி ஒன்றை ஆரம்பித்து தற்போதும் அதை வெற்றிகரமாக நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. கேபி போன்றே இவரும் வேறு நாடுகளில் அதாவது முன்னர் நிதிப்பிரிவின் அனைத்துலகப் பொறுப்பாளராக கடமையாற்றி இயக்கத்தை 'கவிட்ட' சர்வேயுடன் பல நிறுவனங்களை நடத்திவருகின்றார். பிச்சைக்காரன் போல் நடிக்கும் இவர்களின் நாடகத்துக்குப் பின்னால் பல மக்களின் வியர்வையும் புதைந்து போயுள்ளது.

இவர் நாடுகடந்த அரசுக்கு தனது ஊர்க்காரன் பழைய நட்பு மற்றும் கேபி தொடர்பாளர்களுடன் உறவைப்பேணி வருவதுடன், தேசியத்துக்கும் குந்தகம்



ஏற்படுத்துகின்றார். இப்படியான பழைய விதானையார் போக்கையும், மாவீரர்களின் கனவுகளுக்கு நிரந்தர சாவு மணியடிக்க முற்படும் இந்த மனோவின் கட்டமைப்பை நிராகரித்து, அவர்களை தூக்கியெறிய மக்களே புறப்படுங்கள் !

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் தியாகங்களின் மீது அரசியல் கதிரை தேடும் சுபாஸ்

நாடுகடந்த பிரான்ஸ் அரசியலில் 92ம் இலக்கத்தில் போட்டியிடும் கவிஞர் பாலகணேசன் (சுபாஸ்) அவர்களின் உண்மை விடயங்களை கொண்டு வருவதே இவ் விதழின் நோக்கம். பல்வேறு விதமான தகவல்கள் மின்னஞ்சலுக்கு வந்தாலும், அவற்றை ஆராய்ந்த நாம் முக்கிய விடயங்களை மட்டுமே இங்கு தருகின்றோம்.

அந்தவகையில், இவர் முன்னாள் போராளியாக இருந்தாலும் அதற்குரிய தகமைகள் இவரிடம் உண்டா என நாம் பார்த்தால், இல்லை என்றே பதில் கூறலாம். அவருடைய தனிப்பட்ட நடத்தை விடயத்துக்காகவே முன்னர் எரிமலை சஞ்சிகையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். இடைநிறுத்தியவர் மனோவாக இருந்தாலும், இப்போ அவர் அதை ஒத்துக்ககொள்ளமாட்டார். அதை விட்டுவிட்டு நாம் விடயத்துக்கு வருவோம்.

அதாவது, எத்தனையோ கரும்புலிகள் தமது இன்னுயிரைக் கொடுத்து களமாடிய போதும், அவர்கள் ஒருபோதும் தங்கள் பெயரை பெற்றவர்களைத் தவிர குடும்ப உறுப்பினர்கள் யாரையும் பயன்பத்த விடுவதில்லை. ஆனால் 30 வருட (?) போராட்டத்தில் இணைத்திருக்கக்கூடிய இவர் தனது மாவீரக்ளான சகோதரர்களையும், நாட்டுப் பற்றாளரான தந்தையையும் வோட்டு அரசியலுக்கு பயன்படுத்தியிருப்பதானது இவரது எண்ணத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் என்பதை விட நான் என்ன செய்தேன் என்பதையே பார்க்கவேண்டும் எனக்கூறிய தேசியத்தலைவரின் வழியில் வந்தவர்களா இவர்கள்?

'நியமிப்பு அரசியலை நிராகரித்து ஒரு புதிய அரசியல் பண்பாட்டை கட்டியமைக்க உழைத்தல்' எனக்கருத்துரைத்திருக்கும் சுபாஸ் அவர்கள் என்ன விடயத்தை கூறவிழைகின்றார். பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் அரசியல்துறை பொறுப்பாளர் முதற்கொண்டு - தேசியத்தலைவரால் அனைத்து நியமனங்களும் தகுதி அடிப்படையிலும் திறமை அடிப்படையிலுமே நியமிக்கப்பட்டிருந்தன. அதைத்தான் இவர் விமர்சிக்க முயல்கின்றாரா?. தேசியத்தலைவரின் வழிகாட்டலில் போராட்டத்தில் பங்குபற்றியதாக கூறிக்கொள்ளும் இவர் தேசியத்தலைமையை விமர்சிக்க முயல்வது தமிழீழ தேசியம் மீதான இவரது விசுவாசத்தை சந்தேகம் கொள்ள வைக்கின்றது. இவர் போட்டியிடும் பிராந்தியத்துக்கு மனோ தன்னை நியமித்ததாகவே கூறியிருக்கும் இவர் நியமனத்தைப்பற்றி விமர்சிப்பது தன்மீதே சேற்றை வாரிக்கொள்வதாகும்.

'தமிழ் சமூகத்தில் ஆரோக்கியமான உண்மையான ஊடகச் சூழலை உருவாக்குதல்' என கொள்கை வகுத்துள்ள இவர் ஏற்கனவே தகுதி அற்றவர் என்று வெளியேற்றப்பட்ட இவர் மீண்டும் ஊடகச்சூழலை உருவாக்க முயல்வது ஊடகத்துறைக்கே சாபக்கேடாகும். மே18 உடன் பிரான்சின் எங்கோ ஒரு மூலைக்குள் போராட்டங்களில் இருந்து ஓடிப்போய் ஒழிந்து கொண்ட இவர், மீண்டும் பதவி என்றவுடன் மக்களிடம் சரணடைந்து விட்டார்.

'மக்கள் பேரவையை' 'மக்குகள் பேரவையென' பகிரங்கமாக விமர்சிக்கும் இவர்தானா தமிழ் சமூகத்தில் ஆரோக்கியமான உண்மையான ஊடகச் சூழலை உருவாக்கும் தகுதிவாய்ந்தவர்?

**அப்படியானால் இவர்தானா அநாகரீகமான கீழ்த்தரமான முறையில் இணையத்தளங்கள் மூலம் மக்கள் பேரவையை விமர்சிப்பவர்?**







